ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

कतिधा हृदनुबभूविथ तरुतृणकृमियोनिचक्रचंक्रमणम् ।
दिष्ट्या मानुषभावात् पारस्पृगिवासि मात्विह प्रमदः ॥

𑌕𑌤𑌿𑌧𑌾 𑌹𑍃𑌦𑌨𑍁𑌬𑌭𑍂𑌵𑌿𑌥 𑌤𑌰𑍁𑌤𑍃𑌣𑌕𑍃𑌮𑌿𑌯𑍋𑌨𑌿
𑌚𑌕𑍍𑌰𑌚𑌙𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑌮𑍍 । 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌪𑌾𑌰𑌸𑍍𑌪𑍃𑌗𑌿𑌵𑌾𑌸𑌿
𑌮𑌾𑌤𑍍𑌵𑌿𑌹 𑌪𑍍𑌰𑌮𑌦𑌃 ॥

हे हृत्—ஓ! மனமே!!
तरु—மரம்
तृण—புல்
कृमि-புழு (ஆகியஇவைகளின்)
योनि—யோனிகளுடைய
चक्र—ஸமூஹத்தில்
चंक्रमणं—சுற்றித்திரிவதை
कतिधा—எவ்வளவுதடவை களாக
अनुबभूविथ—அனுபவித்துவிட் டாய்.
दिष्ट्या—தைவாதீனத்தால்
मानुषभावात्—மனுஷ்ய ஜன்ம த்தைப் பெற்றதனால்
पारस्पृगिव—அக்கரையைத் தொட்டவன்போல்
असि—இருக்கின்றாய்.
इह तु—இப்பிறவியிலாவது
मा प्रमदः—ஏமாந்துவிடாதே.

அபூர்வமாகக்கிடைக்காதது கிடைத்து விட்டது போலெண்ணிக்
கொண்டு, ஓ! மனமே! இவ்வூன உடலைப் பொத்திப்பொத்தி வளர்க்கின்
றாயே. இப்பிறவி உனக்கு எத்தனையாவது தடவையாய்க்கிடைத்ததோ?
இப்பிறவி ஒன்று மாத்திரமா? திருப்பித்திருப்பி உனக்கு வந்து கொண்டி
ருக்கின்றது? இல்லை இல்லை. ஆனால், மரம், மிருகம், புல், புழு முதலிய
எண்ணிறந்த தாழ்ந்த பிறவிகளை அநாதியான இச்சம்சாரத்தில்எவ்வளவோ
தடவைகளாகச் சுற்றிச்சுற்றி அடைந்து வந்திருக்கின்றாய். அவ்வப்பொ
ழுது அடையப்பட்ட அந்தந்த சரீரத்தை சாசுவதமாக நினைத்துக்கொண்
டு அதை வளர்ப்பதே பெரிய காரியமாகப் பாவித்துப் பாபத்திற்குமஞ்சா
மல் தோன்றியபடி நடந்து பின்னிட்டுப்பரிதபிக்கிறாயே. இன்னும் மய
ங்கிக்கிடக்காதே. கிடைத்தற்கரிதான மனுஷ்ய ஜன்மம், ஏதோ ஒரு
புண்ணிய விசேஷத்தால் தைவாதீனமாக உனக்குக் கிடைத்திருக்கின்றது
இதுதான் பிறவிக் கடலைக் கடந்து அக்கரை யடையச் சிறந்த தோர் கரு
வியாம். இதனை நீ தற்போது அடைந்திருப்பதால் அக்கரையைப்பிடித்த
வன்போல் ஆய்விட்டாய். இதிலாவது ஏமாந்து விடாதே. ஸொந்தஸ்தானம்
சேர ஸாதனந்தேடு. வந்தவிடத்தில் வம்பு பண்ணிக்கொண்டிருக்காதே.
இப்பிறவி விட்டால், எப்பிறவி கிடைக்குமோ, பின்னிட்டு பரிதபிப்பதில்
பயனில்லை. அன்னையின் கர்ப்பாசயத்தில் ஒருவிதம் தீர்மானித்தாயே
அப்படிச்செய்,

பத்திராதிபர்

ஆர்யதர்மம்.
க்ஷய ௵ மாசி-௴ ௨௰வ

ஸம்ஸ்காரம்.

(80-வது பக்கத் தொடர்ச்சி)

ஜனனத்திற்கு முந்தியசம்பவம்

எட்டாவது மாதத்தில் ஓஜஸ் நிலைத்ததாக இருக்கிறதில்லையாம். ஓஜஸ் என்பது சரீரத்திற்கு பலத்தைக் கொடுக்கும் வஸ்துவாம். இதைபற்றி—

यन्नाशे नियतं नाशो यस्मिंस्तिष्ठति तिष्ठति ।

யந்நாஶே நியதம் நாஶோ யஸ்மிம்ஸ்திஷ்டதி திஷ்டதி ।

எது நசித்தால் மனிதன் மரித்துவிடுவானோ! எது நிலைத்து நின்றால் மனிதன் நிலைத்திருப்பானோ, அதுதான் ஓஜஸ் எனப்படும்.

என்று கூறியிருக்கின்றார்கள். அது இந்த எட்டாவது மாதத்தில் நிலைக்காதபடியால் தாயிடமிருந்து சிலகாலம் சிசுவிடத்திலும், சிசுவிடமிருந்து தாயிடத்திலும் அக்காலத்திய அச்சரீரங்களின் பிரபாவத்தாலும் வாயுசத்தாலும்ஸஞ்சரிக்கின்றது. கர்ப்பசரீரம் தாயின் சரீரமிவ்விரண்டிலும்ஸம்பந்தித்திருக்கின்ற இரசதாதுவை வஹிக்கின்ற நாடிகளால் அந்த சஞ்சலமானஓஜஸ்ஸைசிறிதுகாலம் தாயின் சரீரம் ஸ்வீகரிக்கின்றது, அப்பொழுது தாய் ஸந்தோஷமாயிருப்பாள். சிசு, களைத்திருக்குமாம் சிறிது காலம் அதை சிசுவின் சரீரம் ஸ்வீகரிக்கின்றது. அக்காலம் சிசு ஸந்தோஷமாயிருக்குமாம். தாய், களைத்திருப்பாள். ஆகவே சிசுவின் சரீரத்தினின்று ஓஜஸ் விலகித்தாயிடம் சென்ற காலத்தில் சிசு ஜனிக்குமானல் அது உயிரோடு இருக்காதாம். கர்ப்பத்திலேயே மரித்துவிடுமாம். ஒருக்கால் உயிருடன் ஜனித்தாலும் வெட்டுப்பட்ட விரல் ஜீவித ஸம்ஸ்காரத்தால் கொஞ்சம் துடிப்பதுபோல், ஓஜஸ்

ஸின் ஸம்ஸ்கார சேஷத்தால்-மூச்சுள்ளது போலிருக்கும். தாய்க்கு எப்பொழுதும் சேதமில்லை. அதனுற்ருன் எட்டாவது மாதத்தைப் பிரஸவ காலமாக எண்ணக்கூடாது என்று கூறப்படுகின்றது. அதற்காகத்தான் இந்த அகாலப்பிரஸவம் நேராமலிருக்க, கர்ப்பிணி மூந்திய மாதங்களிலும் விசேஷமாக எட்டாவது மாதத்திலும் மிகுந்த நியமத்தோடு இருக்கவேண்டும். ஸ்நாநம் செய்து, சுத்தமாயிருந்து, தேவதைகளையாராதித்துக் கொண்டு ப்ரம்மசர்ய விரதமுள்ளவளாயிருக்க வேண்டும். இந்த அபிப்பிராயத்தாற்ருன் ஸ்மிருதிகளில் கர்ப்பிணீதர்மம் விசேஷமாய்க் கூறப்படுகின்றது. அதாவது:— குப்பைகளிலும், உரல், உலக்கை, புற்று, முதலியவற்றின் மீதும் கர்ப்பிணீ உட்காரக்கூடாது. தனியாய் ஜலத்தில் மூழ்கக்கூடாது. ஒஷதிகள் சேர்த்த வென்னீரில் ஸ்நானம் செய்யவேண்டும். சூன்ய வீடுகளில் செல்லக்கூடாது. ஒருவரோடும் கலகம் செய்யக்கூடாது. கேசத்தை அவிழ்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அசுசியாயிருக்கக்கூடாது. வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது. தலைகீழாகவும், வஸ்திரமில்லாமலும், கவலைப் பட்டுக் கொண்டும், அமங்களவார்த்தை சொல்லிக் கொண்டும், அதிகமாகப் பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும், எப்பொழுதும் படுத்துக் கொண்டும், கால்களை அடிக்கடி நனைத்துக் கொண்டுமிருக்கக் கூடாது. ஸந்தியாகாலங்களில் சாப்பிடக்கூடாது. மரத்தடியில் போகக்கூடாது. மாமனுர்,மாமியார், பெற்ருேர், பெரியோர், பர்த்தா இவர்களைப் பூஜித்து அவரவர்களுக்கு ஹிதமாய் நடந்து நல்ல ஆடையாபரணங்களை யணிந்து இவ்வாறு ரக்ஷை செய்து கொண்டுவரவேண்டும். சக்திக்குத் தக்கபடி தானம் செய்யவேண்டும். பார்வதிதேவியை யாராதிக்க வேண்டும். இம்மாதிரி நியமத்தோடிருப்பவளுக்கு ஜனிக்கும் குழந்தை தீர்க்காயுஸ்ஸாக விருத்தியடையும். இன்றேல் தீர்க்காயுஸ்ஸாயிருக்கிறதில்லையாம் இவ்விதம் நியமத்துடன் மிக்க ஜாக்கிரதையாய் இரக்ஷிக்கப்பட்டு எட்டாவது மாதம் தாண்டி ஒரு நாளாவது கிரமித்து விட்டால் அதற்குப் பிறகு ஒன்பதாவது பத்தாவது மாதங்கள் நல்ல பிரஸவகாலமாம். இது சுவபாவமாயுள்ளது. விபரீதமாகக் கூடியதற்குப் பிரஸவகாலவரை கூறமுடியாது. அம்மாதிரி கர்ப்பத்தால் பெற்ருேர்களுக்கு மாத்திரம்! கெடுதி யேற்படுவதில்லையாம். உலகத்திற்கே கெடுதியுண்டாம். அதனுல்

அவ்விதமான கர்ப்பம் உண்டாகாமலிருக்க எல்லோரும் இறைவனை வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஒன்பதாவது மாதத்தில் ஸர்வலக்ஷணமும் பொருந்தியதாய் விடுகின்றதாம். அன்றியும்முன்கடந்த அநேகஜன்மங்களையும், அவைகளில்செய்யப்பட்ட சுபாசுபகர்மங்களையும், அவைகளால் நேர்ந்த சுகதுக்கங்களையும் நினைக்கும்படியான அறிவு உண்டாகின்றதாம். அதெப்படியெனில்:— சுருதி கூறுகின்றது. இதன் கீழ் என்னால் அநுபவிக்கப்பட்ட பல்கோடிஜன்மங்கள் நினைவுக்கு வருகின்றன. அந்தந்தப் பிறவிகளில் பலவகைப்பண்டங்கள் புசிக்கப்பட்டன. அளவிலடங்கா அன்னைகளின் பலவகைப்பட்ட பால்கள் குடிக்கப்பட்டன. பல பிறவிகளில் பிறந்தவுடன் இறக்கவும் இறந்தவுடன் பிறக்கவும் நேர்ந்தது. சில பிறவிகளில் சில காலம் ஜீவித்திருந்தாலும் அதன் பிறகு மரிப்பதும், உடனே அடிக்கடி ஜனிப்பதும் இதே தொல்லையாய் விட்டதே. அந்தோ! கஷ்டம்!! துக்கஸாகரத்தில் மூழ்கிக்கிடக்கின்றேனே. இதற்குப்பரிகாரம் ஒன்றும் தோன்றவில்லையே. பெரியோர் போதித்ததையும் வேதம்விதித்ததையும் நான் கேளாமல் விட்டுவிட்டேனே. இனியாவது இந்த யோனிக்குழியினின்று விடுபட்டு வெளிப்படுவேனாகில் கர்மயோகத்தைக் கைப்பற்றுகிறேன். ஞானயோகத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன். அசுபங்களை நாசம் செய்து, சுபகர்மங்களின் பயனையும். முடிவில் மோக்ஷத்தையும் தந்தருளும் பரமேஸ்வரனைப் பஜனை செய்து பக்தியோகத்தைப் பலமாக ஆச்ரயிக்கிறேன். இனி வீணாகக் காலம் கழிக்க மாட்டேன். நமது பரிஜனங்களென்று பாவிக்கப் பட்டவர்களுக்காகப் பாபத்தைக் கூடச்செய்து பாடுபட்டது போதுமப்பா! அந்தப்பாபிகள் நான் துன்பப்பட்டுத்தேடிய பயனைப் பங்கிட்டுப் புசித்து விட்டு ஒண்டியாய் என்னைத் திண்டாடவிட்டார்களே. அந்தப் பாபத்திற்காகப் பலகாலம் நரகத்தில் விழுந்து தஹிக்கப் பட்டுத் துடிக்கின்றேனே. இதையவர்கள் கண்டார்களா? இனியவர்களைப் பரிஜனமென்றாவது பந்துக்களென்றாவது கனவிலும் நினைப்பேனோ. போதும். போதும் அவர்கள் செய்த உபகாரம். பரமேஸ்வர! நல்ல புத்தி தந்தருளவேண்டும். இனி ஸஹிக்கமாட்டேன். குறுகிய இக்கர்ப்பக்குகையில் கைகால் நீட்ட மடக்க முடியவில்லை

எல்லா தேசத்திலுமுள்ள ஆர்யர்களின் வித்யாஸமில்லாத நடத்தையை யாவரும் கிரகிக்கத்தக்கதுதானென்று வர இதில் விசேஷம் கூறுகின்றார்.

ஸாதுக்களது நடத்தை யாவராலும் கிரகிக்கத்தக்கதென்பதிலும் ஒவ்வொரு வருணத்தவரும் தத்தமக்குரிய தர்மத்தை மட்டிலும் பெற்றனுட்டிக்கவேண்டுமேயன்றி ஒரு வருணத்தவன்மற்றவனுடையதை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆபஸ்தம்பர் ஒவ்வொரு வருணத்தவரும் தன் தன் தர்மத்தை அனுஷ்டித்தால் உயர்ந்ததும் குறைவற்றதுமான ஸ்வர்க்க சுகம் கிடைக்கிறது. பிறகு மறு ஜன்மம் எடுத்தால் கன்மபலனின்மீதத்தால் ஜாதி ரூபம், வர்ணம், பலம், புத்தி, ரூக்ம, அறிவு, திரவியம் தர்மானுஷ்டானம் இவைகளை நன்கு அடைகிறான். இவ்விதம் சக்கரம் போல் இரண்டு லோகங்களிலும் சுகத்தையே அடைகிறான் என்றார். சுருதி தர்மத்தால் அடையத்தகாதது. ஒன்றுமில்லையென்றே கதறுகிறது. இத்தகைய தர்மத்தில் தான் உலகம் பிரதிஷ்டை பெற்றிருக்கிறது. இத்தகைய தர்மிஷ்டனைத்தான் பிரஜைகள் பின்பற்றுவார்கள். ஆகவே தர்மமென்று பொதுவாய்க் கூறிவிட்டாலும் வர்ணத்திற்கும் ஆசிரமத்திற்கும் வர்ணாசிரமத்திற்கும் பிரித்து எவ்விதம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அத்தகைய தர்மங்களை அவரவர்கள் அனுஷ்டித்துச் சிரேயஸ்ஸை அடையவேண்டுமென்றார், சந்திரிகாகாரர்—

वर्णत्वमेकमाश्रित्य यो धर्मस्संप्रवर्तते ।
वर्णधर्मस्स उक्तस्तु यथोपनयनं किल ॥
तथैवाश्रममाश्रित्य योऽधिकारः प्रवर्तते ।
स एवाश्रमधर्मस्स्याद् भिक्षा दण्डादिको यथा ॥
वर्णत्वमाश्रमत्वं च योऽधिकृत्य प्रवर्तते ।
स वर्णाश्रमधर्मस्तु यथा मौञ्जी तु मेखला ॥

𑌵𑌰𑍍𑌣𑌤𑍍𑌵𑌮𑍇𑌕𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌵𑌰𑍍𑌣𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌸 𑌉𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌯𑌥𑍋𑌪𑌨𑌯𑌨𑌂 𑌕𑌿𑌲 ॥
𑌤𑌥𑍈𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌸 𑌏𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾 𑌦𑌣𑍍𑌡𑌾𑌦𑌿𑌕𑍋 𑌯𑌥𑌾 ॥

சிரிவாய்க் கூறுவோம். இதனால் பிறப்புக்கு முந்தியே அந்தந்த ஜாதிக்கு நிமித்த காரணமாய் நிற்கும் ஸத்துவாதி குணங்களும் கர்மங்களும்] அபிவியக்தங்களாய் விடுகின்றனவென்றேற்படுகின்றது. இதனால் ஜனித்த பின் செய்யப்படும் கர்மங்களுக் கேற்றவாறு ஜாதி மாறுவதாகக் கூறுபவர் வாதம் பிரமாணத்திற் கொத்ததாக இல்லையென்பதும் ஸித்தமாகின்றது. "சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்" என்கிற கீதாவாக்கியமும் இக்கருத்தைத்தான் கொண்டுள்ளது என்று சான்றோர் கூற்று. "ப்ரம்மானந்த கிரி" யென்னும் கீதாவியாக்யானத்தைச் செய்த வேங்கடநாதரென்னும் மஹானுபாவரால் அந்தச் சுலோகத்தின் வியாக்கியானத்தில் இது ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டுள்ளது. ஆங்கே கண்டு தெளிக. இதனால், அனாதி காலமாக ஸம்ஸார சக்கிரத்தில் சிக்கிக் கொண்டு சுற்றிச் சுழண்டு கொண்டிருக்கும் ஜீவாத்துமாவுக்கு மானிடப் பிறவி கிடைப்பது அரிதாம். ஸத்துவ குணம் மேலிட்டு வேதாதிகாரம் பெற்ற பாக்கியவானாய்ப் பிறப்பது அதனிலும் அரிதாம். இதைப் பற்றித் தான் கீதையில் பகவான்—

एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ।

ஏதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம யதீத்ருசம் ।

இம்மாதிரி ஜன்மம் இவ்வுலகில் கிடைப்பது அரிதிலுமரிது என்று கூறியுள்ளார். இதை யடைந்தவர்கள் இதன் பெருமையை யுணராதது ஓர் பெரிய விந்தை. அதற்குத் தக்கபடி நடக்காமலிருப்பது அதனிலும் விந்தை. கலிமஹாராஜனின் கொடுமையாயிதுவும். இதற்கெல்லாம் பயப்படாமல் துணிந்து நின்றோமானால் க்ஷேமத்தை யடையலாம். கலியிற் பிறந்துவிட்டோமே யென்று நம்மையே நாம் குறைத்துக் கொள்ளாமல், ஸாது ஸங்கம் செய்து, ஸத்புத்தி யடைந்து, ஸதாசாரம் செய்து, ஸாவதானமாயிருந்து, நாமெல்லோரும் நற்கதி பெற வேண்டுமென்று இதன் கருத்தாம்.

பத்திராதிபர்.

இந்திய சங்கீதப் பிரசாரம்.

நமது பரமாச்சாரியார் பாதகமலங்களில் ஸதாகாலமும் பக்தியுள்ளவரும், பிரபல சங்கீத வித்வானும், தஞ்சை ஜில்லா சேங்காலிபுரம் கிராமவாசியுமான ஸ்ரீமான் தாஸன். எஸ். வி. நடராஜன் தனது சங்கீதக் கொள்கைகளின் விஷயமாகப் பிரசுரஞ்செய்திருக்கின்றவோர் ',பிரகடனப் பத்திரிகை'' நமது பார்வைக்கு அனுப்பியுள்ளதைப் பார்க்க நிரம்பவும் சந்தோஷங்கொள்ளுகிறோம்.

அப்பத்திரிகையில், முதன் முதலாக, நமதாச்சாரியார் ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் மனப்பூர்வமாக, நடராஜனது கொள்கைகள் உலகெங்கும் கிஞ்சிற்றும் பக்ஷபாதம், அசூயை முதலிய குணங்களில்லாது பரவ, ஸ்ரீமுக வாயிலாக அருளியிருப்பதில், "யாஜ்ஞவல்கியர் முதலிய மகர்ஷிகளினால் நாதப்பிரும்ம ஸ்வரூபமான சங்கீதம் மிகவும் கொண்டாடப்பட்டிருக்கின்றதென்றும், இரண்டல்லாது ஒன்றான கடவுளுடன் ஒன்றாகக்கலந்து மோக்ஷத்தை யாவற்று ஜீவன்களுமடைய சங்கீதம் ஓர் தொப்பமாகுமென்றும், சில காலமாக சரியானபடி, ராஜாக்கள், பிரபுக்கள் முதலியவர்களினால், இவ்வித்யை மற்ற வித்யைகளைப் போலவே. ஆதரிக்கப்படாது ஜீர்ணதசையை யடைந்து வருகிறதென்றும், இச்சமயத்தில் சங்கீதரத்நாகரம் முதலிய அரிய கிரந்தங்களைத் தொடர்ந்து நமது அந்தரங்கப் பிரிய சிஷ்யன் நடராஜன் கிரந்தங்கள் எழுதிவருவதும் பிரசாரஞ்செய்து வருவதும், ஒவ்வொரு ஆன்மாவும் இந்நாதப்பிரும்மத்தின் வாயிலாக பகவானை உணர்ந்தனுபவிக்க வேண்டுமென்று பாடுபட்டுவருவதும் பற்றியும், மேன்மைதங்கிய கவர்மெண்டார், சுதேச மன்னர்கள், பிரபுக்கள் முதலியோர்களினால் இவரது பிரயத்தனம் பூர்த்தியடைய, தான் ஸ்ரீ திரிபுரசுந்தரீ சமேதரான ஸ்ரீ சந்திரமௌளீசுவரரைப் பிரார்த்திப்பதாகவும். தவிர்த்து தாம் விசேஷ உதவி செய்திருப்பதும்'' புலப்படுவதை கவனிக்கவும், இவ்விஷயங்களை ஸ்ரீ பட்டத்தினது மற்றய சிஷ்யர்களிற்கும் தெரிவிக்கவும் பிரியப்படுகிறோம்.

பிறகு, கடப்பை ஜில்லா புஷ்பகிரி சமஸ்தானம் சங்கராசாரியஸ்வாமிகள், நமது பரமாச்சாரியார் அவர்களின் அபிப்பிராயத்

திற்கிணங்கியும், நேரில் நடராஜனுடைய சங்கீதத்தையும். அதன் கிரந்தங்களையுமனுபவித்தும், ஓர் ஸ்ரீமுகமருளியிருப்பது வெளியிடப்பட்டிருக்கின்றது பார்க்க ஆனந்தங் கொள்ளுகிறோம்.

இவைகளிற்கும் பிறகே, நடராஜன் தனது கொள்கைகளை முகவுரை வாயிலாக வெளியிட்டிருக்கின்றனர். அதில் தான் இப்பெரிய விஷயத்தை (1)"எங்கும் பிரணவ (நாத) ரூபமாக இருந்து தனது அளவிலாத்தேஜஸ்ஸை சமபுத்தியுடன் எங்கும் செலுத்திக் கொண்டும், தனது பொறிகளை (அணுக்கள்) ஸமஸ்த ஜிவகோடிகளிடமும் சற்றும் பட்சபாதமில்லாது 'நானுன்னுட்வசிக்கின்றேன் நானுன்னுட் வசிக்கின்றேன்' என்றிரவு பகலா யறிவித்துக் கொண்டும், பின்னும் பலவற்புதச் செய்கைகளிற்கும் காரணமாகத்தனது நாதப்பிரும்மத்தினது ஒதவியைக் கைக்கொண்டுமிருக்கின்ற வோர் வஸ்துவின் கிருபையின் வாயிலாகவும் (2) அப்பரம்பொருளினது ஏகதத்வத்தை யாவற்று ஆன்மகோடிகளும் முதலில் அறிந்தும், பிற்பாடு கிஞ்சிற்றும் பேச்சுக்களில்லாது தான் தான் ஸ்வானுபவத்தில் உணரவேண்டுமென்பதாக இப்பூவுலகிலும் அடிக்கடி அவதரித்து மனமுடன் கதறிக்கொண்டிருக்கின்ற லோக குருக்களின் ஆசீர்வாதத்தினது உதவிவாயிலாகவும்' (3) அப்பிரணவச் சாகரத்தின் தம்சத்திவோர் துளியை 'தன்னுட் தானறிந்தாலு மறியாவிட்டாலும்' வைத்திருப்பவர்களும், அந்தப் பிரும்மத்தின் மீது அளவிலாப் பிரேமை வைத்திருப்போர்களுமான தனது சோதர-சோதரிகளினது நட்பைக் கொண்டும்," இப்பிரசாரத்தை ஆரம்பித்திருப்பதாகவும், யாவற்று தேசத்தினர்களும் பரஸ்பரம் ஒவ்வொரு தேசத்திய கீதத்தையும் லகுவாக அப்பியசிக்கும்படியான வோர் குறிப்பு (Notation), சில மேல் நாட்டினர்கள், கீழ் நாட்டினர்களினுதவியைக் கொண்டு கண்டு பிடித்திருப்பதாகவும், இந்த சாஸ்திரத்தின் வாயிலாக ஒவ்வொரு ஜீவனும் 'நிரந்தர சௌக்கியம், சாந்தம், பேரின்பம்' இவைகளை முறையே யடைந்து எங்கும் பிரகாசமான வோர் கடவுளை நெருங்கவேண்டுமென்றும், எல்லா தேசங்களிலும் பூர்வகாலத்தைப் போல் இந்நாதப்பிரும்மத்தை அனுபவித்தறிய யாவரும் சிரமமெடுக்க வேண்டுமென்றும் கவர்மெண்டார் சங்கீதத்தை மேற்கு நாடுகளில் அனுசரிக்கப்பட்டு வருவதைப் பின் தொடர்ந்து, நம

பாரத பூமியிலும், பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் கட்டாயப்படிப்பாக வைக்கவேண்டுமென்றும், இப்பெரிய விஷயத்தை, மேன்மை தங்கிய கவர்மெண்டார், சுதேசமன்னர்கள், லோககுருக்கள், ஜனத்தலைவர்கள், மற்றுமுள்ளப்பிரபுக்கள் முதலியோர்கள் செழிந்தோங்கி வளரச் செய்யவேண்டுமென்றும், கூறியிருப்பதை, நாம் மனமுடன் ஒப்புக்கொள்ளுகிறோம்.

பிறகு, தனது சங்கீத கிரந்தங்களின் பெயர்களும், அதிலடங்கிய விசேஷங்களும், சில புத்திமான்களினால் எழுதப்பட்டிருக்கிற முகவுரைகளின் சுருக்கமும் இவரது கொள்கைகளும், கிரந்தங்களும் எங்கும் பரவுவதற்குப் பல புத்திமான்களினால் அனுப்பப்பட்டிருக்கிற ஆசிர்வாதக் கடிதங்களின் சுருக்கமும், சிலபக்கங்களில் பிரசுரமாகியிருக்கின்றன.

முடிவில், நடராஜன், இந்நாதப் பிரும்மத்தை கடவுளிற்கு ஒவ்வொரு ஆன்மாவும் உபயோகிக்கக் கடமைப்பட்டுள்ளதென்று கூறவதையும், பிரயாசை எடுத்து வருவதையும், எல்லாவல்ல பகவானும், அவரது ஜீவகோடிகளும் கிருபைபுரியவேண்டுமென்று, நாம் பிரார்த்திக்கின்றோம்.

இப்பிரகடனப் பத்திரிகையை தமிழ், தெலுங்கு முதலிய இதர பாஷைகளிலும், பிரசுரம் செய்வது பலர்களை இவ்வரிய விஷயத்தில் ஈடுபடத்தூண்டும் என்று நமக்குப்புலப்படுகின்றதை நடராஜன் அங்கீகரிப்பாராக.

ஆன்ஹிகக்ரமம்,

(56-வது பக்கத்தொடர்ச்சி)

நைமித்திக ஸ்நாநம்.

நித்ய ஸ்நாநத்திற்கு அநுபவ ஸித்தமான ப்ரத்யக்ஷபலனைக் கண்டோம். காவேரிமுதலிய நதீ தீரத்தில்வஸித்துப்ராதஸ்நாநம் செய்பவர்களுக்குத் தனியான ஓர் வர்ச்ச ஸ்முகத்திலிருக்கிறது

சண்டாளாதி அசுசிகளைத் தீண்டுவதாலும் க்ரஹணாதி நிமித்தங்களாலும் செய்யும் ஸ்நாநம், நைமித்திகமாகும். நைமித்திகம் காம்யம் மலாபகர்ஷணம், கிரியாஸ்நாநம் இவைகள் அவசியம் ஜலத்தில் மூழ்குவதான வாருணமாகவே செய்யவேண்டும். மற்றவை உசிதம் போல் ஸ்நாநப்ரதிநிதிகளான கௌணாதிகளால் செய்யலாம். பதிதன், (ஸ்வகர்மத்தை விட்டவன்) ரஜஸ்வலை, ப்ரஸவித்தவள், சண்டாளன் இவர்களுக்கு முறையே 1, 2, 3, 4, நுகத்தடி தூரத்தில் விலகி நிற்கவேண்டும். இவ்வெல்லைக்கருகில் வந்து விட்டால் உடனே கட்டிய துணியுடன் ஸ்நாநம் செய்ய வேண்டும். தெரிந்தே வேண்டுமென்று மேலே பட்டால் ஸ்நாநத்தோடு வேறு பல பிராயச்சித்தங்களுமுண்டு. கீழ்கண்டவர்களின் நிழல், கூலிக்காகக் கோவில்பூஜை செய்பவர், ஸ்மசாநம், பிணப்புகை, நாய், பன்னி, கழுதை, ஒட்டை, ஓனாய், காக்கை, கோழி, கழுகு, கோட்டான், இவைகளின் விஷ்டை, எலும்பு, மயிர், வாந்தி, ஸ்திரீஸங்கம், பூனைவால், பிணந்தூக்கியவன், எச்சல், சூத்ரன், ஜைநன், பௌத்தன், ம்லேச்சன், பிணத்தைப்பின்தொடர்ந்து, துக்கக் கண்ணீர் விட்டு, துக்கம் விசாரித்தவன், இவை அசுசிகள். இவைகளைத் தொட்டும், செய்தும், அசுசியாய் விடுவதாய் உடனே ஸ்நாநம் செய்ய வேண்டும். ஆனால் எக்காரணங் கொண்டும் புஜித்தவுடனும் இரவிலும் ஸ்நாநம் செய்யலாகாது. போஜநத்திற்குப் பிறகு கொஞ்ச நேரங்கழித்தும், இரவில் அத்யாவச்யம் நேர்ந்தபோது அக்கினியின் எதிரில் பகல் எடுத்த தண்ணீரால் முழுகலாம். க்ரஹணம் ஸங்கிராந்திவிவாஹம் ஜநநம் மரணம் இச்சமயங்களில் இரவு ஸ்நாநம் குற்றமானதல்ல. அறியாத குளத்தில் ஸ்நாநம் செய்யக் கூடாது. இடுப்புக்குக் கீழுள்ள அவயவங்களைக் கீழ்ச்சொன்ன ப்ராணிகள் தீண்டி விட்டால் எக்காரணத்தாலோ ஸ்நாநம் செய்ய முடியாதவர் அவ்விடத்தை ஜலத்தாலலம்பி நெய்யைத் தடவி அக்னியில் காய்ச்சினால் போதுமானது. ரஜஸ்வலை முதலியவர்களைப் பல் முளைக்காத சிசு தீண்டினால் ஜலத்தால் ப்ரோக்ஷித்தால் சுத்தியாகும். மூன்றுமாண்டு முடியும் வரை பாலனுக்கு ஆசமனத்தால் சுத்தி அதிலிருந்து உபநயநம் ஆகும் வரை குமாரனுக்கு ஸ்நாநத்தாலேயே சுத்தியாகும். தேவதைகளைப் பூஜித்தபிறகும், பந்துக்களைப் பின் தொடர்ந்து வழி யனுப்பிய பிறகும் இரவில் எண்ணெய் தேய்த்துக்கொண்டும் உத்ஸவ

மான பிறகும், மங்களங்களைச்செய்த பிறகும் ஸ்நாநம் செய்யக்கூடாது.

தீட்டும் அசுசியும் எப்படி உண்டாகிறதென்பது நமது ஊனக்கண்ணுக்கு விளங்காது. ஞானக் கண்ணைக்கொண்டு மஹர்ஷிகள் சொல்லியதையே நம்பவேண்டும். மயிர்க்கால் வழியாகச் சரீரத்தினுள்ளேயிருந்து பல மலங்கள் வெளிக் கிளம்புவதாக வைத்ய நூல் கூறுகிறது. அது இக்கண்ணுக்கு விளங்காது. ஸூக்ஷ்மார்த்ததர்சியான சில கருவிகளைக்கொண்டு சிலர் அதைத்தற்சமயம் மெய்ப்பிக்கின்றனர். அதுபோல் நமது முனிவர் கூறும் அசுசியை யறிய அக்கண்ணில்லாதாருக்கு புறக்கண் விரைவில் வாலாம். அதனுண்மையைக் கண்ணால் காணும் வரை சுத்தி செய்வதில்லை எனத் தீர்மானிப்பவன் ஆத்மசக்தியை யிழக்கும் அக்ஞனுவான். நாய் முதலிய எந்த ப்ராணிகளைத் தீண்டக்கூடாது; அது பார்த்ததை உண்ணக்கூடாது, என சாஸ்திரம் முறையிடுகிறதோ; அவையெல்லாம் தற்காலநாகரீகத்தில் நமது அருமையான குழந்தையை விட அதிக ஆதாவு பெருகின்றன. காலைக் குடியும், விருந்துணவும், ஸோப்பு ஸ்நாநமும், மெத்தைப் படுக்கையும்' உயரிய ஸ்திரீகளின் மடிலாலனையும், உச்சிமுகர்தலும் செய்யப்படுகின்றன. உயர்ந்த சுத்தமான மானுடன் பழகியதால்அடுத்த பிறவி மானுகப் பிறக்கவேண்டியிருந்தது ஓர் உத்தம முனிக்கென, பாரதங் கூறுகிறது. மிக அல்ப ப்ராணியின் சேர்க்கையால் உயர்ந்த பிறவியை மாற்ற மோஹங் கொள்வது மடமையாகும். அன்னியரிடமிருந்து கைக்கொண்ட இதுபோன்ற துராசாரங்களைக் களையும் நாளே நமது நாட்டிற்கு நன்னுளாம். அன்றியும் ஸூக்ஷ்மமாகப் பார்த்தால் நமது தேஹத்திலிருந்து ஆத்ம சக்தியானது வித்யுத் சக்திபோல் உள்ளும்புறமும், ஓடுகிறது. நாய் முதலிய பிராணிகளின் மிருகசக்தியால் இதற்கு ஹானி உண்டாகும். உடனே ஸ்நாநம் செய்வதால் அது நீங்கும். ஜலத்தில் வித்யுத்சக்தி இருப்பதை முன்னமே முனிவரறிந்தனர். ஆதலால் ஒவ்வொன்றிலும் அவர் கூறியபடி செய்து ஆராய்ச்சியால் இது போன்ற தத்துவங்களை அறியக் கூடும். நம்பிச் செய்பவர் நலம்பல பெறலாம். பல நோய்களை வர விட்டாமல் தடுக்கின்றனர் ரிஷிகள். ஆதலால் வீண் வாதம் செய்யாமல் ரிஷிகள் சொன்னபடி அசுசிகளை யகற்றிச் சுத்தியுடனிருந்து நன்மை பெறுவோமாக.

சந்த்ர ஸூர்யர்களுக்குக் கிரஹணம் உண்டாகும்போது ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசௌசம் உண்டாவதால், அது பிடிக்கும் போதும் விடும் போதும் ஸ்நானம் செய்ய வேண்டும். ஏற்கனவே ஏதாவது தீட்டுள்ளவனாயிருந்தாலும் கட்டாயம் ஸ்நானம் செய்ய வேண்டும். முன் சொன்னபடி, ஸமுத்ரம், கங்கை, மஹாநதி, தடாகம் முதலியன க்ரமமாக மேலானதாகும். அச் சமயம் முழுகாதவன் ஏழு ஜன்மத்தில் குஷ்டரோகியாய்ப் பிறப்பான். கிரஹணகாலத்தில் தூங்கலாகாது. ஜபம் செய்யவேண்டும். அப்போது செய்யும் தானம் ஜபம் முதலியவை அதிக பலனுடையதாகும். க்ரஹணத்திற்கு நாலு யாமம் முதலே உணவு உட்கொள்ளலாகாது. ககோள சாஸ்திரப்படி சந்த்ர ஸூர்யர்களுக்கு க்ரஹணம் ஏற்படும்போது நமக்கும் நேராக ஒருவகை தோஷம் ஏற்படுகிறது. அச் சமயம் உறங்கினாலும், உண்டாலும், உடலுக்குத் தீங்குண்டாகிறதாம்.

ஆதுரஸ்நானம். வியாதியால் பீடிக்கப்பட்டு ஸ்நானம் செய்ய முடியாமலிருக்கும் ஒருவனுக்கு விதிக்கப்பட்டது ஆதுரஸ்நானம். த்ருடாங்கனான ஒருவன் அவனை முப்பது முறை தொட்டுத் தொட்டு ஸ்நானம் செய்யவேண்டும். அப்பப்போதும் ஆதுரனுக்கும் புதியமடி வஸ்திரம் கட்டவேண்டும். பிறகு அவன் சுத்தனாகிறான். யாதுமொரு பயனை விரும்பிச் செய்யும் ஸ்நானம் காம்ய ஸ்நானமாகும். மாக ஸ்நானம், துலாஸ்நானம், முதலியவைகள் இவ் வகுப்பைச் சார்ந்தவை.

மலாபகர்ஷண ஸ்நானம். ஸ்தூல சரீரத்திலுள்ள ஸூக்ஷ்மமான மலத்தை நீக்குவது இதன் கார்யம். மயிர்க்கால்களிலும் மற்றும் சிலவிடங்களில் அவைகள் தங்குகின்றன. எண்ணெய் தேய்த்து வென்னீரில் நன்றாக ஸ்நானம் செய்வதால் அவை நீங்கும். அன்றியும் கொஞ்சம். உஷ்ணதேசமான நமது நாட்டிலுள்ளோர் தேகத்திற்கு எண்ணெயின் நசநசப்புவேண்டுமென வைத்ய நூல்கள் கூறுகின்றன. அநுபவத்தால் அப்யங்கஸ்நானத்தின் அரிய பயனை அறிகிறோம். இயற்கையாக ஈசனளித்த நசநசப்பை விட அதிகமும் தேவையிருப்பதால் செயற்கையால் அதைப் பூர்த்தி செய்து கொள்கிறோம். அந்த ஸ்நானத்தைத் திங்கள் புதன் சனி என்ற வாரங்களிலும் த்விதீயா திருதீயா சதுர்த்தி பஞ்சமி ஸப்த

மி நவமி தசமி த்ரயோதசி இந்த திதிகளிலும் செய்து கொள்ள வேண்டும். இதர நாட்களில் செய்துகொண்டால் பல ரோகங்கள் உண்டாகும், பாபமும் நேரும். ஸங்க்ரமணம் முதலிய பித்ருதினங்களிலும் அப்யங்கம் கூடாது. உபவாஸமிருந்தவனும் தீட்டுள்ளவனும் வமநம் செய்து கொண்டவனும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாது. தீபாவளி தவிர மற்ற தினங்களில் விடியற் காலையில் அப்யங்கம் கூடாது. எண்ணெயுடன்வாஸநாத்ரவ்யமோ நெய்யோ கலந்திருந்தால் நித்யஸ்நானத்துடன் சேர்த்துக்கொள்வது குற்றமாகாது. அவசியமேற்பட்டால் ஞாயிறில் புஷ்பத்தையும் வியாழனில் தூர்வையும், வெள்ளியில் கோமயத்தையும், செவ்வாயில் மிருத்தையும் எண்ணெயுடன் கொஞ்சம் கலந்து தேய்த்துக்கொள்ளலாம். துளஸீதளத்தைச் சேர்த்தாலும் போதும். தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து உடம்பிற்குத் தடவக் கூடாது. பிண்ணாக்கைத் தின்னக்கூடாது. இவை ஆயுளை அபஹரிக்கும். எவருக்கேனும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்படி ஸௌகரியம்செய்பவனுக்குப்புண்யமதிகம், எண்ணெயை அடியோடு நீக்குவதால் சோப்பு உதவாது.

கிரியாஸ்நானம் ஸந்தியை ச்ராவணம் சிராத்தம் முதலிய கர்மாக்களுக்கு அங்கமாக ஸ்நானம் செய்வது கிரியாஸ்நானமாகும். உயர்ந்த தீர்த்தத்தில் அமர்ந்த பின்னர் ஆசமனீயம் செய்து ஸங்கல்பமானவுடன் அத்தீர்த்தத்தில் கங்காதிகளை ஆவாஹநம்செய்ய வேண்டும். கீழ்ச்சொன்னபடி ஸகல மந்திரங்களையும் சொல்லி மூழ்கி அகமர்ஷணத்தைப் படிக்கவேண்டும். தீர்த்த யாத்ரை செல்பவர் நடந்து போவதே புண்யம், மாட்டு வண்டியில் செல்வது மிகப்பாபம். தாம்பூலம் அப்யங்கம் பாதுகை குடை ஸ்திரீஸங்கம், இவைகள் புண்யத்தைப் பங்கிட்டுச் செல்லும் யாசகம் செய்து யாத்ரை செய்பவருக்குப் பூர்ணபலமில்லை. எல்லா நதிகளும் ஸமுத்திரத்தில் இருப்பதால் பர்வகாலத்தில் ஸமுத்ரஸ்நானம் விசேஷம் ஸத்பிராமணனின் பாதத்தை யலம்பினால் அந்த தீர்த்தம் மிக விசேஷமானது. மஹாவிஷ்ணு வஸிக்குமிடமும் க்ஞாநதீர்த்தமும் விசேஷமானவை. கங்கையைத் தவிர ஏனைய நதிகள் ஆவணிமாதத்தில் ரஜஸ்வலைகளாம். ஆகலால் கலங்கிய புது ஜலத்தை விட்டுத் தெளிந்த பிறகு ஸ்நாநம் செய்ய வேண்டும்

கௌணஸ்நாநம்.

முக்யமான வாருணஸ்நாநம் செய்யமுடியாத காலத்தில் மேல்கண்டவை செய்யத்தக்கவை. சக்தியும் ஸௌகரியமும் உள்ளவன் கௌணஸ்நாநம் செய்தால் அதன் பயனைப் பெற மாட்டான். காபிலம். ஈரத்துணியால் உடல் பூராவும் துடைத்துக்கொண்டு விழுப்பு வஸ்திரத்தைவிழுத்தும்மடிபிரவஸ்திரத்தை. யணிந்து காலலம்பி ஆசமனீயம் செய்வது காபிலமெனப்படும். இரண்டுகால்இரண்டுகை முகம்இவைகளைஜலத்தால் நனைத்துமடியுடுத்துக்கொள்வது பஞ்சாங்கஸ்நாநம் "ம்ருத்திகே" என்ற மந்திரத்தைக் கூறி சுத்தமான துளஸிச் செடியின் கீழிருக்கும் மண்ணால் பாதாதிகேசபர்யந்தம் தடவிக்கொள்வது பார்த்திவஸ்நாநம் அக்னிஹோத்ர விபூதி அது கிடைக்காதவிடத்தில் தான் செய்த ஔபாஸன பஸ்ம அல்லது ஸாதாரண பஸ்மாவை "ஈசானம்" முதலிய மந்திரங்களால் உடம்பெல்லாம் தூளநம் செய்துக் கொள்வது ஆக்னேய ஸ்நாநமாம். கோக்கள் போய்க்கொண்டிருக்கும்போது அதன் குளம்பு தூளி தன்னுடலில் படும்படி கோசூக்தத்தை ஜபிப்பது வாயவ்யஸ்நாநம். உத்திராயணத்தில்வெயில் காய்ந்துக்கொண்டிருக்கும்போதே மழை பெய்தால் அதில் நனைவது திவ்யஸ்நாநம். "ஆபோஹிஷ்டாதி" மந்திரங்களால் ஸர்வ அவயவங்களைத்தர்ப்பாக்ரத்தால்ப்ரோக்ஷித்துக் கொள்வது மந்திர ஸ்நாநம் அல்லது ப்ராஹ்மஸ்நாநம் எனப்படும். சுத்த மனதால் ஸர்வ வியாபியான பரமசிவனது ஜடையிலிருந்தோ மஹாவிஷ்ணுவின் பாதாரவிந்தத்திலிருந்தோ பெருகும் கங்கையால் ப்ரம்மரந்திர வழியாகத் தனது தேஹமாத்யந்தம் நனைவதாக நினைத்தல் மாநஸிகஸ்நாநம்.

வஸ்த்ர மணிதல்.

ஸ்நாநம் முடிந்த பிறகு வெளுப்பாகத் தோய்த்து உலர்த்திய இரண்டு வஸ்திரங்களை ஜலத்தால் ப்ரோக்ஷித்து உதரி வெய்யிலில் காண்பித்து அங்கவஸ்திரத்தைத் தலையில் கட்டிக்கொண்டு இடுப்பு வஸ்திரத்தை யணியவேண்டும். புதிதாக வந்ததானல் ப்ரோக்ஷிக்கவும் எடுக்கவும் உதரவும் சூர்யனுக்குக் காண்பிக்கவும் தனித்தனி மந்திரமுண்டு. மேல்வஸ்திரத்தைக் 'கீழாகவும் கீழை மேலாகவும் மாற்றக்கூடாது. தனிகன் பட்டை உடுத்தவேண்

டும். மூலகச்சம், கச்சமில்லாமை, அரணாளில் கட்டிய கச்சம், மேனோக்கிய கோணக்கச்சம், கொளுத்திய அழுக்குள்ள, தைத்த, நனைந்த துணியை உடுத்தல், இவைகள் வஸ்திரமில்லாமைக்கு ஸமானம், அங்கவஸ்திரம் அரணாள் இவை அவசியம். இவையில்லாமல் செய்த கர்ம அசுரகர்மாவாகும். இடுப்புக்குமேல் அங்கம் சுத்தம். கீழ் அங்கம் அசுத்தம், இதைப்பிறிப்பது அரணாள். எக்காரியத்திற்கும் மேல் வஸ்திரமவசியம். அதற்காக எப்போதும் ஓர் அதிகப் பூணூல் தரிக்கவேண்டும் வஸ்திரத்தைத் தோய்த்த பிறகே ஸந்தியாதி கர்மா செய்யவேண்டும். உச்சிஷ்டபாகிகளான பித்ருக்கள் ஸந்தோஷத்திற்காக அத்துணி ஜலத்தைக் கரையில் விடவேண்டும். ஈரத்துணியைத் தோளில் வைக்கலாகாது. கீழேயும் வைக்கக்கூடாது. உலர்ந்த துணி அகப்படாத காலத்தில் எழுமுறை காத்தில் உதறி ஈரத்துணியை உடுத்திக் கர்மா செய்யலாம். பிரும்மசாரி முழங்காலுக்குமேல் துணி கட்டவேண்டும். வித்யா விருதமான பிறகே தொங்கவிட்டுக் கட்டலாம். அதே விவாகத்திற்கு முதல் நாள் ஜாநுவாஸமெனப் படுகிறது. ஆத்மசக்தி துணியின் நுனிவழியாய் கீழிறங்காமலிருக்கவேபட்டுக்கரை போட்ட வேஷ்டி பஞ்சகச்சமாக அணியத்தக்கதென விதி.

ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மா.

ஸநாதன தர்ம ப்ரசாரம்

ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்காராசாரிய ஸ்வாமிகள் உத்திரவுப்படி ஆஸ்தான வித்வானும் ஆரியதர்மம்பத்திராதிபருமான பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண பிரும்மஸ்ரீ வெங்கட்டராமசாஸ்திரிகளவர்கள் சென்ற ஒருமாதமாகச் சென்னையில் ஸநாதந தர்மப்பிரசாரம் செய்து வருகின்றார்கள். “கர்மயோகம்” என்பதைக் குறித்து மைலாப்பூரில் மூன்று உபன்யாஸமும் “பக்தியோகம் வர்ணாச்ரமம்” என்பதைப்பற்றி கோபாலபுரத்தில் மூன்றும் கீதையின் ஸாரம் என்பதைப்பற்றி திருவட்டீசுவரன் பேட்டையில் இரண்டும் “கலிதர்மம்” என்பதைக் குறித்து நுங்கம்பாக்கத்தில்ஒன்றும், “ப்ரஹ்லாதன் கீதை” என்பவைகளைக்குறித்து அமரகலாவிலாஸினீ ஸபையினுதரவில் முத்யால்பேட்டையில்

மூன்றும், ஷை ஸபையாதரவிலேயே "அவதாரம் ச்ராத்தம்" என்பதைக்குறித்து மாம்பலத்தில் மூன்றும் ப்ரஹ்லாதசரிதத்தைப்பற்றி திருவல்லிக்கேணியில் இரண்டு உபன்யாஸமும் நடத்தப்பட்டன. ஸம்ஸ்கிருதத்தில் ஆமாகலாவிலாஸினீஸபையினுதாவில் ப்ரும்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா ஓர் ஸ்வாகதபத்திரமளித்து அவர்களை உபசரித்தார், நாஸ்திகம் நிறைந்த இதுபோன்றவிடங்களில் இத்தகைய அருமையான உபந்யாஸங்கள் அவச்யமானவை. ஆரியதர்மத்தின் உபபத்திராதிபரும் வேதாந்தகேசரி மஹாமஹோபாத்தியாயர் பிர்ம்மஸ்ரீ ப. கணபதிசாஸ்திரிகள் ஸோதரரும், கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளின் ஸ்ரீமடம். ஆஸ்தானவித்வானும் மஹோபதேசக கவிரத்நமுமான பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளின் வரவை ஷை ஸபையும் சென்னையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது. தி. ராமநாத தீக்ஷிதர்.

மதிப்புரை.

அத்வைத தரணி:

முடிகொண்டான் ஜானகிராம சர்மாவால் அனுப்பப்பட்ட இப்பெயர் வாய்ந்த ஒரு புஸ்தகத்தை வரப்பெற்றோம். இது திருவிசநல்லூர் மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ ராமசுப்பிரமண்ய சாஸ்திரியவர்களுடைய சிஷ்யரும் ஷை ஜானகிராம சர்மாவின் பிதாவுமான பிர்மஸ்ரீ நடேசய்யரால் சந்திரிகாப்பிரகாசப்பிரஸரம் என்றுபெயர் வாய்ந்த இதர மதஸ்தரால் எழுதப்பட்ட கிரந்தத்திற்குக் கண்டனமாக இயற்றப்பட்டது. மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜி பிரின்ஸ்பால் மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ வெங்கிடசுப்பிரமணிய சாஸ்திரிகளால் இது நன்கு சோதித்து அச்சிடப்பட்டிருக்கிறது.

அத்வைதத்தைப் போதிக்கும் சுருதிகளிலும் அவைகளுக்குப் பாஷ்யம் இயற்றிய ஸ்ரீஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யாள் பாஷ்யங்களிலும் அக்ஞானத்தாலேற்படும். சங்கையாகிய இருளை கதிரவன்போல் அறவே போக்கி ஸ்வப்பிரகாசரூபமான அத்வைத ஞானத்தையளிக்கும் சக்தி இதற்குண்டென்பதை யறிவிக்கவேண்டியே அத்வைதத்ரணி என்கிற சிறந்த பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பூர்வபக்ஷங்களின், ஆசங்கையை 60 70 பாகமாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் விடைகூறப்பட்டிருக்கின்றது. அத்வைத மதஸ்தர்களுக்கு இது மிகவும் உபயோகமுள்ளதென்று பலரும் கருதக்கூடியதே. வேண்டியவர்கள் அடியிலுள்ள விலாஸதாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை ரூ. 1—8—0

என். ஜானகிராம சர்மா

நடுத்தெரு, முடிகொண்டான், நன்னிலம் ஸ்டேஷன் வழி.

ஆர். உபபத்திராதிபர்.